**நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை—5.**

**ந.க. எண். 37567/92/ஆர்1** **நாள் 23.6.93**

**சுற்றறிக்கை**

**பொருள்** வரி மற்றும் வரியில்லா இனங்கள் – நகராட்சிகள் / நகரியங்கள் – காலங்கடந்த வரியினம் நிலுவை வசூல் செய்தல் – தொடர்பாக.

**பார்வை** 1) இவ்வலுவலக சுற்றறிக்கை எண். 37667/92/ஆர்1, நாள் 27.8.92,
2) இவ்வலுவலக சுற்றறிக்கை இதே எண். நாள் 22.9.92, 30.11.92, 1.12.92, 21.12.92 மற்றும் 22.4.93.

---

பார்வையில் கண்டுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கைகளின்பால் அனைத்து நகராட்சி ஆணையர்கள் / நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அவைகளில் காலங்கடந்த வரியினம் ஏற்பட காரணமாக இருந்த வரித்தண்டலர், வருவாய் ஆய்வர், உதவி வருவாய் ஆய்வர், இருக்கை உதவியாளர், வருவாய் அலுவலர், மேலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆணையர்கள் மீது எந்த விகிதாச்சார அடிப்படையில் அன்னாரிடமிருந்து தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும் என பல முறைகள் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், சில நகராட்சி ஆணையர்கள் விகிதாச்சார முறையினை பின்பற்றாமல் வரித்தண்டலர்களிடம் கூடுதலான விகிதத்தில் தொகை பிடித்தம் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகின்றது. இது இவ்வலுவலக சுற்றறிக்கைகளை கடைப்பிடிக்காமல் தன்னிச்சையாக செயல்படுவதையே தெள்ளத் தெளிவாக காட்டுகின்றது. இக்குறைபாட்டிற்கு தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள் / நிர்வாக அதிகாரிகளே பொறுப்பாவார்கள். அவர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட விபரப்படி தான் தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| 1) வரித்தண்டலர் | .. 30% |
| 2) வருவாய் ~~உதவியாளர்~~ ஆய்வர் | .. 30% |
| 3) இருக்கை உதவியாளர் | .. 20% |
| 4) வருவாய் அலுவலர் / உதவி வருவாய் அலுவலர் மேலாளர் | .. 15 % |
| 5) ஆணையர் / நிர்வாக அதிகாரி | .. 5 % |
| | 100% |

மேற்படி விகிதாச்சார முறைப்படி தான் காலங்கடந்த வரியினம் ஏற்பட காரணமாக இருந்தவர்கள் மீது தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும் என மீண்டும் அனைத்து நகராட்சி ஆணையர்கள் / நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இதில் ஏதேனும் தவறு நேர்ந்தால் அதற்கு தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள் / நிர்வாக அதிகாரிகளே முழுப்பொறுப்பாவார்கள் எனவும் அவர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) பொ.இராமலிங்கம்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள் /
நிர்வாக அதிகாரிகள்.

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,
(மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தங்கள் மண்டலத்தில் உள்ள நகராட்சிகளில் இவ்விவரங்களை கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்.
26.7.06.